விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 வைகாசி 14 ரம்ழா 6 இதழ் 106
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 27-5-1985


## ஏனைய படைகளைப் போன்ற புதிய தேசிய துணைப்படை

(கொழும்பு)
தேசிய துணைப் படையொன்றை அமைப்பதற்கான பிரமாணங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

எந்த ஒரு ராணுவபடையினருக்கும் உரிய அந்தஸ்தை இந்த தேசிய துணைப்படையும் கொண்டிருக்கும்.

இப்படைக்கு தளபதி ஒருவர் நியமிக்கப்பட்டு அவரின் கீழ் இயங்கும் படைக்கு ஆட்களை சேர்த்துக்கொள்ளும் அதிகாரம் இவருக்கு வழங்கப்படும். அடுத்தவாரம் இவர் நியமிக்கப்படுவார். ஏனைய படைகளைப் போன்றே இவர்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்பட்டு அவற்றின் உபயோகம் அனுமதிக்கப்படும்.

ஏதாவது ஒரு பகுதியில் தாக்குதல் அல்லது அமைதியின்மை ஏற்படுமானால் அப்பகுதிகளைப் பாதுகாப்பதற்காக இவ்வீரர்கள் அழைக்கப்படுவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## எம். ஜி. ஆர். திட்ஷித் சந்திப்பு

[சென்னை]
புதிதாக இலங்கைக்கான ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள திரு. திட்ஷித் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனை நேற்று சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்பில் பல முக்கிய விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

திரு. திட்ஷித் நேற்று கொழும்பு சென்று சேர்ந்துள்ளார். [ரா]

## தகவல் இல்லை

(யாழ்ப்பாணம்)
அநுராதபுரத்தில் இடம் பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து சகல தரப்பிலுமுள்ள சுமார் 25 தமிழர்கள்பற்றி இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்று 'பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுவின்செயலாளர் திரு. ஜ. தி சம்பந்தன் கவலை தெரிவித்துள்ளார். [மா]

## கொழும்பில் நேற்று முன்தினம் கைதான தமிழ் இளைஞர்

# 145 பேரும் விடுதலை!

(கொழும்பு)
நேற்று முன்தினம் கொழும்பில் தமிழ் வீடுகளில் வைத்து கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

பயங்கரவாத இயக்கங்களுடன் இவர்களுக்குத் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இவர்கள் கைதுசெய்யப்

(6ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மாளிகை அருகில் நடமாடிய தமிழ் இளைஞர் கைது!

(கொழும்பு)
கொழும்புக் கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையருகில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடினார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுகோட்டை நீதவான் ஜனுப் இமாம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இருவரையும் விளக்க மறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

## லண்டன் செல்வோர் 24 மணி நேரத்தில் விண்ணப்பிக்க வேண்டும்!

(லண்டன்
இங்கிலாந்து வரும் வெளிநாட்டவர்கள் 24 மணி நேரத்துக்குள் தமக்கு அரசியல் புகலிடம் தரும்படி கோரிவிண்ணப்பிக்க வேண்டும் அதன் பின் அதற்கான தகுதியிருப்பதற்கான ஆதாரங்களை நிரூபித்தாக வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் 2 மாதம் அவகாசம் வழங்கப்பட்டிருந்தது அதனை இப்போது 24 மணி நேரமாக இங்கிலாந்து அரசு குறைத்துள்ளது.

## தீவிரவாதிகளை வெல்வது சுலபமான காரியமல்ல! லலித் கூறுகிறார்

[கொழும்பு]
"பயங்கரவாதிகளுடன் சண்டையிட்டு வெற்றிபெறுவதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல" என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி ரத்மலானையில் நடைமெற்ற பொது வைபவமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அமைச்சர் லலித் தொடர்ந்து அங்கு பேசுகையில், "அரசாங்கம் பயங்கரவாதத்தைப் பூண்டோடு ஒழித்துக்கட்ட பல்வேறு உத்திமுறைகளைக் கையாண்டு வருகின்றது. நாட்டைப் பிடிக்கும் எண்ணம் நிறைவேறாத பட்சத்தில் நாடு முழுவதையும் அழித்துவிடும் நோக்குடன் இயங்கிவரும் தீவிரவாதிகளின் ஆபத்தை எதிர்நோக்கும் நிலையிலுள்ள மக்கள், ஐக்கியம், திடசங்கற்பம், புரிந்துகொள்ளும் எண்ணம் ஆகியவற்றுடன் செயல்படுதல் அவசியமென்றும் தெரிவித்தார். [ரா]

## பொலிஸ் பயிற்சி

(கொழும்பு)
1 லட்சத்து 20 ஆயிரம் சிங்கள மக்களுக்கு விரைவில் சாதாரண பொலிஸ் பயிற்சி வழங்குவதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

## பட்டதாரிகளைப் பதிவு செய்தல்: 20-ம் திகதிக்குப் பின்னரும் விண்ணப்பம் அனுப்பலாம்:

(கொழும்பு)
1983-ம், 84-ம் ஆண்டுகளில் பல்கலைக்கழக பட்டம் பெற்ற வேலையற்ற பட்டதாரிகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 20-ம் திகதிக்குள் அனுப்புமாறு கோரப்பட்டிருந்தது.

ஆயினும் வடபகுதியிலுள்ள பட்டதாரிகளுக்கு இந்த விண்ணப்பங்கள் குறிப்பிட்ட அமைச்சிலிருந்து 20-ம் திகதிக்கு பின்னர் தான் கிடைத்துள்ளது.

இந்த விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திகதிக்கு பின்னரும் அனுப்பலாம் என்று கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் திரு கே. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

மேற்படி விண்ணப்பங்களை அனுப்பும் போது அதனுடன் சேர்த்து தாமதத்துக்கான கடி

(6ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி வைத்திருப்போரை தெரிவு செய்யும் அதிகாரம் எம். பி.க்களுக்கு

[கொழும்பு]
தமது தொகுதிகளில் துப்பாக்கி வைத்திருப்போரை தெரிவுசெய்யும் அதிகாரம் தொகுதி எம். பி. களுக்கு வழங்கப்படவுள்ளது.

எம் பி களுக்கு நிறைவேற்று அதிகாரம் வழங்கும் அரசின் திட்டத்தில் இதுவும் ஒன்றாகும். பாதுகாப்பு சம்பந்தமான பரவலான அதிகாரங்கள் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

தங்கள் தொகுதிகளை பாதுகாப்பதற்கு பொலிஸ், இராணுவத்தை பயன்படுத்தும் அதே சமயம் பொதுமக்கள் பாதுகாப்புசபைகளை ஏற்படுத்தவும் எம். பி. களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

## கொம்பனித் தெருவில் ஒருவர் கைது!

(கொழும்பு)
கொழும்பு கொம்பனித்தெருவில் தமிழ் இளைஞர் ஒருவர் ராணுவத்தனரால் கைதுசெய்யபட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## பணக் கொடுக்கல் வாங்கல்: வங்கிக் கிளைகள் இன்று முதல் இயங்கும்

[யாழ்ப்பாணம்]
யாழ். பொலிஸ் நிலையத்தில் உள்ள விடுதிகளில் பணக் கொடுக்கல வாங்கல்களுககாக வங்கிக் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வர்த்தக வங்கி, ஹட்டன் நாசனல் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி தபால் அலுவலகம் ஆகியவற்றின் கிளைகளே அங்கு அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இவ் வங்கிக் கிளைகள் பொலிஸ் நிலைய விடுதிக் கட்டிடங்களில் திறந்துவைக்கப்பட்டன.

குருநகர் தொடர்மாடிக் கட்டிடத்தில் இராணுவத்தினர் இருந்தபோது முகாமுக்கு முன்னால் உள்ள கட்டிடத்தில் வங்கிகளின் கிளைகள் இயங்கி வந்ததும், இராணுவத்தினர் கோட்டைக்குள் வந்து சேர்ந்ததும் பாதுகாப்புக் கருதி வங்கிக் கிளைகள் கோட்டைக்கு அருகாமையிலுள்ள பொலிஸ் நிலைய விடுதிக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

வங்கிகளில் பணக் கொடுக்கல் வாங்கல் செய்வோரும், வாடிக்கையாளர்களும், பெறுமதியான முத்திரைகள் வாங்குவோரும் கடற்கரை வீதிவழியாகப் பாதுகாப்புடன் குறிப்பிட்ட வங்கிக் கிளைகளுடன் நேரில் தொடர்புகொள்வதற்குத் தகுந்த வசதிகள் இன்று முதல் செய்யப்பட்டுள்ளதாக வங்கிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். [மா]

## 183 தங்கப் பாளங்கள்: 19 இலங்கையர் சிக்கினர்!

[மதுரை]
48 லட்சம் ரூபா பெறுமதியான 183 தங்கப்பாளங்களை மதுரை சுங்கத்துறையினர் கைப்பற்றியுள்ளனர் இது சம்பந்தமாக 19 இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருவனந்தபுரத்தில் இருந்து கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் பிரகாரம் மதுரையில் வாகனங்களை சோதனையிட்ட சுங்கத்துறையினர் மூன்று வாகனங்களில் இருந்த மேற்படி தங்கப் பாளங்களை கைப் பற்றினர்.

## அந்த பஸ் பத்திரமாக வந்து சேர்ந்தது!

[யாழ்ப்பாணம்]
கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் காலை புறப்பட்ட தனியார் பஸ் ஒன்று நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. பிரயாணிகளுக்கோ பஸ்ஸிற்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்த பஸ் வரும்போது தாமதம் ஏற்பட்டு, ஊரடங்குச் சட்ட நேரத்தில் யாழ் நகர் வரமுடியாதிருந்ததினால் நேற்று முன்தினமிரவு பரந்தனில் தரித்துவந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த பஸ் நேற்றுக் காலை மீண்டும் கொழும்புக்குப் புறப்பட்டது இது தவிர வேறு சில தனியார் பஸ்களும் நேற்றுக் காலை கொழுமபுக்குப் புறப்பட்டன.

அநுராதபுரம் செல்லாமல் வேறு பாதையால் இந்த பஸ்கள் செல்வதாகக் கூறப்படுகின்றது.

இன்று காலையும் தனியார் பஸ்கள் கொழும்புக்குச் செல்லவிருக்கின்றன. (க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

சியாக்காய், பச்சை அரிசி, பயறு, வெந்தயம் ஆகிய நான்கு சேர்வையிலுள்ள சியாக்காய் பவுடர் விற்பனைக்குண்டு பெக்கட் 5/50 தொடர்பு கொள்க. M.G.M and Stores, 777 காங்கேசன் துறை வீதி and 208 முதலாம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. (2820)

சண்டிலிப்பாயில் புதிய வீடு 3 படுக்கை அறைகள், சகல நவீன வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு-எஸ்.யோகராசா, சட்டத்தரணி, தொட்டிலடி, சண்டிலிப்பாய். 3448

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் (பழைய C T. B. டிப்போவுக்கு அருகாமையில்) 6 பரப்புக் காணி, வீடும், நல்ல தண்ணீர் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு:- பொ சிவபாலன், சட்டத்தரணி, சித்தன்கேணி 3446

சோமசுந்தரம் அவனியூவில் ½பரப்பு வெறும் காணி மலிவு விலையில் விற்பனைக்குண்டு, தொடர்பு:- திருமதி பொன்னுத்துரை, 39/1 சோமசுந்தரம் அவனியு, யாழ்ப்பாணம். 3455

A/L இரசாயனம் வினா-விடை நூல் பொது இரசாயனம், அசேதன இரசாயனம் (1-ம் பாகம்) வெளிவந்துவிட்டது. விற்பனை செய்யும் இடங்கள்: 108, Brown Rd; பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, பஸ்தியாம்பிள்ளை புத்தகசாலை, யாழ்ப்பாணம். 3470

## வைத்தியம்

மூலவியாதிகள், பாரிசவாதம், முழங்கால் வாதம் போன்ற வாதரோகங்களுக்கும், பீனிசம், எக்ஸிமா, தொய்வு, நரம்புத் தளர்ச்சி, மாதவிடாய் கால உபத்திரவங்கள், குழந்தைகள் சம்பந்தமான வியாதிகளுக்கும் விசேடமான சித்த, ஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. மங்களாம்பிகை அம்பாள் D A.M, மங்களபதி வைத்தியசாலை, 41/5, சங்கிலியன் வீதி, நல்லூர். 3407

## தேவை

வீடியோ சினிமாப் படங்கள் ரெகோடிங் செய்வதற்கும், வீடியோ ஸ்தாபனத்தில் பணிபுரியவும் அனுபவம்மிக்க யாழ் மாநகர எல்லைக்குள் வதியும் ஒருவர் தேவை. தொடர்பு கொள்க:- வீடியோ பிரசாத், 49, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். 3471

வெளிநாட்டுத் தூதராலயமொன்றுக்கு வழங்குவதற்கு ஜோஸ்யர் (19-10-84) முதலாவது இதழ் தேவைப்படுகிறது. வைத்திருப்போர் அதனைக் கருணை கூர்ந்து அனுப்பி வைக்கவும். 222/4 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 3466

## தவறிவிட்டது

பல முக்கிய திறப்புக்களுடன் கோர்வையொன்று (25-5- 85) காலை நல்லூருக்கும் பரமேஸ்வராச் சந்திக்குமிடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். பல்கலைக் கழகப் பாதுகாப்புப்பகுதியினரிடம் சேர்ப்பிக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3473

இல:- 522220094V கந்தையா துரைராஜேஸ்வரன் உரும்பிராய் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கோட்டை முனியப்பர் கோவிலுக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. துரைராஜேஸ்வரன், பிள்ளையார் கோவிலடி, சங்குவேலி, மானிப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3463

## சேவை

உடுவிலைச் சேர்ந்த திரு. N. யோகராசா J. P. அவர்கள், தவறிய எனது அடையாள அட்டையை திரு. மகாலிங்க மாஸ்டர் J. P. மூலம் கொடுத்து அனுப்பியதற்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன் -மு. இராமநாதன். 3453

## தேவை

யாழ்ப்பாணம் ஹ்ரேயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவியாளர் தேவை. நேரில் வரவும். 3457

## மணப்பந்தல்

யாழ்ப்பாண இந்து வேளாள சமூகத்தைச் சேர்ந்த மேற்கு ஜேர்மனியில் (Factory) ஒன்றில் ஐந்துவருடங்களாக வேலைபார்க்கும் தீய பழக்கங்கள் அற்ற பன்னிரண்டில் செவ்வாய் தோஷமுள்ள 34 வயது மணமகனுக்கு பெற்றோர் மணமகள் தேடுகின்றனர். மணமகள் அங்கு இருப்பவராகவோ அல்லது அங்குபோய் விவாகம் செய்யக் கூடியவராகவோ இருக்க வேண்டும். சீதன விபரம், குறிப்பு புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.3449 C/Oஈழநாடு, யாழ்ப்பாணம். (3449)

## நல்லூர் ப.நோ.கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### கிளைமுகாமையாளர்

**208 : 14**

மேற்படி கிளைமுகாமையாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

விபரங்களுக்கு பொது முகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம், திருநெல்வேலி என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பப் பத்திரங்களை காரியாலயத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 8 - 6 - 1985

பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

3467

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## வெற்றுச்சாக்குக் கேள்வி விண்ணப்பம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 4862 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கு உண்டு வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப் படிவம் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் இடதுபக்க மூலையில் ''வெற்றுச் சாக்குகள் கேள்வி'' என எழுதப்பெற்று பொது முகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 29 - 05 - 85.

பொது முகாமையாளர்,
சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

24 - 5 - 85,
சங்கானை. 3461

The Principal, Staff and Pupils of St. John's College, Jaffna, cordially invite you to the

PRIZE GIVING

on Saturday the 1 st of June, 1985 at 9-00 a. m.

Chief Guests:
Prof N. Sreeharan, M. D. (Cey), M. R. C. P. (U.K), Ph D. (Leeds)
(Professor of Medicine, University of Jaffna and Consultant Physician Gen. Hospital, Jaffna)
and
Mrs. Shivani Sreeharan

Chairman:
Ven. Sam. D Horsh-ington
Archdeacon of Jaffna.

C. E. Anandarajah,
Principal.
3411

## காணி விற்பனவு

1. யாழ்ப்பாணம் கச்சேரி கண்டி வீதிக்கு அண்மையில் 10 பரப்பு காணி.
2. யாழ் கொழும்புத்துறைவீதியிலும், நெடுங்குளம் வீதியிலும் 2 பரப்பு காணித்துண்டுகள்.
3. யாழ் புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்திக்கு அண்மையில் 27 பரப்பு.

வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு 20% தொடக்கம் 25% வரை வட்டி கொடுக்கப்படும். வங்கி உத்தரவாதமும் ஒழுங்கு செய்யப்படும்.

விபரங்களுக்கு:-
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை (மேல்மாடி, யாழ்ப்பாணம்.
போன்: 23698

## இலகு வழியில் வெளிநாட்டுப் பயணம்

★ உலகின் பணக்கார நாடு ஒன்றிற்கு செல்ல விரும்புகிறீர்களா?
★ மனிதனின் அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் இலவசமாக வழங்கும் ஒரு நாடு.
★ போக்குவரத்து சினிமா காட்சிகூட இந்த நாட்டில் இலவசம்.

பிரயாண ஒழுங்குகள் 5-6-85ற்கு முதல் தினசரி பி.ப 3 மணி முதல் 5 மணிவரை தொடர்புகொள்ளவும்

**சி. சிவஞானம் (சுசிதர்)**
C. E C. முனீஸ்வர கபே,
(மேல்மாடி) சேகரம் பில்டிங்,
சுன்னுகம்.

(3472)

## முதலாம் ஆண்டு — மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்கள்

கே. எஸ். தேவராஜா (தேவா)



தோற்றம்: 1946-08-22
மறைவு: 1984-05-27

கே. எஸ். ஞானராஜா (ஞானி)



தோற்றம்: 1955-08-09
மறைவு: 1982-05-29

எனது நெஞ்சத்தில் என்றும் நீங்காத இடம்பெற்ற என் அன்புச் செல்வங்களே! நீங்கள் ஆண்டவன் மடியில் வீற்றிருக்கும் நிலையை அகக்கண்ணால் கண்டு ஆறுதலடைகின்றேன். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

உங்கள் அம்மா.

மருதங்கேணி, தாளையடி. 3266

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

டாக்டர் குகராஜா கணபதிப்பிள்ளை



அன்னையின் அணைப்பு: 1929 11-10

ஆண்டவன் அழைப்பு: 1984 06-06

திதி: 27-05-85

ஆண்டொன்று சென்றதுவே,
எம் வேதனை மிகுந்ததுவே
காலச் சதியையெண்ணி கலங்குகிறோம் அன்பு அப்பா
நேசமுடன் வளர்த்துவிட்டு
பாசச் சுமையுடனே நீங்கள்
பறந்தெங்கே சென்றீரோ. ஓராண்டு சென்றாலும்
ஓர் யுகமே சென்றாலும் தீராது எங்கள் கவலை
மீளாத வழி சென்ற எங்கள் பாசமுடைய
தந்தையினது நினைவு என்றும் நீங்காது நிலைத்திருக்கும்.

மீளாத் துயருறும்
அன்புத் தாய், மனைவி,
பிள்ளைகள் - அனுஷா, கிரிஷா.

பொலிஸ் நிலையத்தடி, சுன்னாகம். 3413

## மணிவாக்கு

யாவருஞ் சமமென உணர்ந்திடலின்பம்
யாவருஞ் சகோதரரென்பதும் இன்பம்
யாவரும் நலனுற உழைத்திடலின்பம்
யாவருமொன்றென வொன்றிடலின்பமே

—சிவயோக சுவாமிகள்

# நமது நோக்கு

## இஸ்லாமிய சகோதரத்துவம்

போர்த்துக்கேயர் ஒரு சமயம் ஒரு முஸ்லிம் கப்பலைக் கைப்பற்றி அந்தக் கப்பலில் இருந்த திருக்குர் ஆனை ஒரு நாயின் கழுத்தில் கட்டி பாரதத்தின் பிரபல நகரம் ஒன்றின் தெருவிலே துரத்திவிட்டனர்

இந்த அவமதிப்புச் செயலுக்காக கிறிஸ்தவர்களின் வேத புத்தகமான பைபிளை ஒரு கழுதையின் கழுத்தில் கட்டிவிட வேண்டும் என்று இந்தியப் பேரரசர் அக்பரின் தாய் கூறினார்.

அதற்கு அக்பர் ''அக்கிரமத்துக்கு அக்கிரமத்தால் பதிலளிப்பதுஒருஅரசனுக்கு அழகல்ல, எந்த மதத்தைப் பழித்துக் கூறினாலும் அது கடவுளை அவமதிப்பதேயாகும். அதனால் அந்த திவ்விய புத்தகத்தின்மீது நான் வஞ்சம் தீர்த்துக் கொள்ள விரும்பவில்லை'' என்று கூறிவிட்டார்.

இந்தியாவில் பௌத்த மதத்தைப் பரப்பிய அசோகன் கொல்லாமையின் மகத்துவத்தை உணர்ந்ததால் இன்று சுதந்திர இந்தியா கைக்கொண்டிருக்கும் அசோக சக்கரத்துக்கு வழிவகுத்தார்.

இஸ்லாமின் பெருமைக்கு எடுத்துக்காட்டாவ அக்பர் மாமன்னனின் பரம்பரையே இன்றும் சுதந்திர இந்தியாவின் மூன்றாவது ஜனாதிபதியான இஸ்லாமிய பேரறிஞரும் ஞானியுமான மகாத்மாவின் நெருங்கிய நண்பன் சாகிர் ஹுசெயின் அவர்கள்.

இதற்கு மாறான அரசியல் இந்திய உபகண்டத்தில் இன்றும் உள்ளபோதும் இஸ்லாம்,ரமழான் நோன்பு காலத்தில் சகல மதத்தவர்களுக்கும் ஏற்றுக்கொள்ளும் விழுமியங்களையும் பண்புகளையும் நினைவுறுத்தும் காலமாகும்.

பேரரசர் அக்பர் பற்றி நாம் குறிப்பிட நேரிட்டதால், எங்கள் நாட்டிலும் அக்பர் என்றபெயரில் ஒரு சிறந்த ''அரசர்'' வாழ்ந்ததை நாம் நினைவூட்டுவது இக்கால இளஞ் சந்ததியினருக்கு பலனளிக்கும்.

அமரத்துவம்பெற்ற எம். ரீ. அக்பர் இலங்கை கண்ட முதலாவது உயர் நீதிமன்ற நீதியரசர், யாழ்ப்பாண மண்ணின் தனிச் சிறப்பை நன்கறிந்தவர்.

யாழ்ப்பாணம் சுப்ரீம் கோர்ட் அசைசஸ் (Assizes) நடக்கும் போதெல்லாம் இங்கு அவரை வரத் தூண்டுவது யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய பொருள் ஒன்று என்று பகிரங்கமாக மேடையில் கூறிவந்தவர். யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் வசித்துவந்த சிவயோக சுவாமிகளே அப்பொருள் என்று பரவசப்படுவதை வயது வந்தோர் பலர் இன்றும் நினைவில் வைத்திருப்பார்.

இஸ்லாமியருக்கும் தமிழருக்கும் இஸ்லாமியருக்கும் சிங்கள மக்களுக்கும் பெரும் பாலம்போல அமைந்த சிரேட்ட நீதியரசர் அக்பர் அவருடைய அளப்பரிய அறநெறியில் வழுவாதிருந்ததால் குறிப்பிட்ட பிரபலமான கொலை வழக்கில் வழங்கிய தீர்ப்பு தவறானதென்பதை இங்கிலாந்தின் பிறிவிக்கவுன்சில் வெளியிட்டதும் [illegible] பதவி துறந்தார்.

இலங்கையின் முதலாவது இஸ்லாமிய பிரதம நீதியரசராக வரவேண்டியவருக்கு இக்கதி நேர்ந்ததே என்று மக்கள் கவலைப்பட்டனர். அவர் மதிப்புடன் வாழ்ந்து தமது பொது வாழ்க்கையில் தொடர்ந்து பல அரிய பெரிய சேவைகளை எவ்வித பேதமுமின்றி ஆற்றிவந்தார். இதனை இலங்கையின் பல்வேறு சமூகங்கள் உணர்வது இன்று மிகமிக அவசியமாகிறது.

நாட்டின் வரலாற்றில், இத்தகைய தேசியவீரர்கள் எல்லா சமூகங்களிலும் இருந்திருக்கின்றனர்.

இன்று நாம் 'தேசிய வீரர்கள்' என்று தெரிந்தெடுத்துக் கொண்டாடும் போது அது இன மத மொழிக் கோட்டாவுக்கு உட்படுவதும், தரப்படுத்தலில் தட்டுண்டுபோவதும் சாதாரணம்.

குறிப்பாக தமிழ்-முஸ்லிம் உறவுகள் தேவையற்ற முறையில் குழம்பியதும், அதனைத் தீர்த்துவைக்கப் பல தலைவர்கள் முன்வந்தபோதும் அரசியல் லாபத்தில் உருசிகண்ட சிலர் அதனைத் தடுக்க முயன்றது நாட்டின் சாபக்கேடு.

இந்தியாவின் ஆலம்கான் பேசியது பற்றி இலங்கை, இஸ்லாமியத் தலைவர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு இருந்தபோதும் அதனைக்கண்டிப்பதை முதற் கடமையாகக் கொண்ட தலைவர்கள் இங்குண்டு. கல்கத்தாவில் தனிநபர் ஒருவர் திருக்குரானை அகற்றிவிட வேண்டுமென்று தொடர்ந்த வழக்கில் அபிப்பிராயம் கூறி அதனை நிராகரிக்க வேண்டுமென்று ஆரவாரப்படும் தலைவர்கள் இந்நாட்டில் இஸ்லாம் எவ்வாறு சிறக்க வேண்டுமென்பதை அறியாதவரே.

## றமழான் சிந்தனை

மத்யன் நகர மாந்தருக்கு அவருடைய சகோதரர் ஷுஐபை நாம் தூதராக அனுப்பினோம். மக்களே! அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனைத் தவிர வேறு நாயன் உங்களுக்கில்லை. அளவையும் நிறையையும் குறைக்காதீர்கள். (அப்படிக் குறைத்தால் இன்று நீங்கள் நல்ல நிலையில் இருக்கக் காண்கிறேன். ஆனால் நிச்சயமாக ஒரு நாள் [நீங்கள் தப்பமுடியாதபடி] உங்களைச் சூழ்ந்துகொள்ளும் வேதனை வருமே என்றஞ்சுகிறேன்.

[திருக்குர்ஆன் 11 : 84)
நோன்பு நோர்க்கும் நேரம் (மஃரிப்) 6-22. நோன்பு ஆரம்பிக்கும் நேரம் [ஸகர் முடிவு] 4-18.

—ஜனபா, நஸீகா அமீன்

### ✯ உலக அரசியல் அரங்கு

# தென் ஆபிரிக்கா அனைத்து உலகின் வேண்டுகோளை உதாசீனம செய்கிறது!

இன ஒதுக்கலுக்குப் பலியாகும் கறுப்பர்களுக்காக உலகின் பல நாடுகளும் ஐ. நா. வும் தென்ஆபிரிக்காவுக்கு விடுத்த உருக்கமான வேண்டுகோளை தலைவர் ஜெனரல் போதர் எள்ளளவும் பொருட்படுத்தவில்லை. அவருடைய எதிர் நடவடிக்கைகள் தீவிரமாகத் தெரிகின்றன.

### அங்கோலா

அதற்குமேலாக அங்கோலாவில் அது நடத்திவரும் ராணுவத் தாக்குதல் இன்றைய நிலைமையை மோசப்படுத்துகிறது. அங்கோலா ஆட்சியின் ஸ்திர நிலையைக் குலைப்பதே இவ்வித தாக்குதலின் நோக்கமென்பது அந்நாட்டின்வாதம். அங்கோலாவின் வடக்கில் அமைந்திருக்கும் எண்ணைக் குதங்களைத் திடீரெனத் தாக்கிய தென்ஆபிரிக்கா கொம்மாண்டோப் படைகளை அங்கோலா முறியடித்துவிட்டதாகச் செய்தி கூறுகிறது. தாக்குதல்படை அங்கு போகவில்லையென்றும் உளவு பார்க்கச் சென்ற ஒருசிறு கூட்டத்தினரே காணமற்போய்விட்டனர் என்பது தென்ஆபிரிக்க பாதுகாப்பு அமைச்சரின் விளக்கம். ரஷ்யாவின் சார்பில் அங்கோலாவில் தொழிற்படும் படைகளின் நடமாட்டமே இந்த உளவுக்குக் காரணமென்றும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

இவ்வித ஊடுருவலை அமெரிக்க ராஜாங்க அமைச்சு வன்மையாகக் கண்டித்திருக்கிறது. அங்கோலாவின் தேசிய இறைமைக்கு எதுவித ஆபத்தும் இருக்கப்படாதென்பதும் வேற்றுநாட்டுப் படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டுமென்பதும் அமெரிக்காவின் ராஜதந்திரம். அமெரிக்காவின் கண்டனம் அவ்வளவு தாரம் நேர்மையானதென்பது சந்தேகத்திற்குரியது. அங்கோலா கியூபன் படைபலத்தின் ஆதிக்கத்தில் இருப்பதாகவும் ரஷ்யாவின் 'வால்' கியூபா என்று கருதும் அமெரிக்கா அங்கோலாவின் இன்றைய ஆட்சிக்கு மனப்பூர்வமான ஆதரவளிக்குமென்று நம்புவதற்கில்லை.

### நமீபியா

நமீபியாவின் சுதந்திரம் நீண்டகாலமாக தடைப்பட்டு வருவது தெரிந்ததே. தென்மேற்கு ஆபிரிக்காவில் உள்ள துரதிர்ஷ்டத்துக்குப் பலியாகிவரும் நமீபியாவுக்கு தென்ஆபிரிக்காவின் பிடியிலிருந்து விலகிக்கொள்ள வழிகிட்டவில்லை 101 நாடுகள்கொண்ட அணிசேரா இயக்கத்துக்குத் தலைமைதாங்கும் இந்தியா சென்ற வெள்ளிக்கிழமை ஐ நா.வின் பாதுகாப்புசபை ஒரு விசேட கூட்டம் ஒன்று நமீபியாபற்றிக் கூடவேண்டுமெனக் கேட்டிருக்கிறது. ஆனால் ஐ. நா. ஜூன் இரண்டாம் வாரத்துக்கு முன் கூட்டம் கூட்டுவது சாத்தியமல்ல.

'இடைக்கால ஆட்சி' என்றொரு திட்டம் நமீபியாவுக்கு வகுத்து தென்ஆபிரிக்கா காலம்கடத்துவதோடு புதிய பிணக்குகளை பெருக்கி வருகின்றது. மக்கள் இயக்கத்தை முறியடிக்க வெள்ளையரின் இனவெறி ஆட்சி முயல்கின்றது. இதற்கு அமெரிக்கா உடந்தையாயிருப்பது குறிப்பிடத்தக்கது.

### லெபனான்

எதிர்பாராத அட்டூழியங்களும் தினந்தோறும் கைமாறும் யுத்தமும், யுத்தநிறுத்தமும் உலகில் வேறெங்கும் காண முடியாத கொடுமைகள் லெபனானில் தொடர உதவுகின்றன.

கடந்த பத்து வருடங்களாக அமைதியின் நிறத்தையும் குணத்தையும் காணாத நாடு லெபனான். இஸ்ரேல் நடத்திய போர் பிசுபிசுத்தது எதிர்பாராத காரியம்! லெபனானை விட்டு இஸ்ரேலிய படைகள் முற்றாக வெளியேறுவது ஜூன் முடிவில் முற்றாகுமென உறுதி கூறியவர் இஸ்ரேல் பிரதமர் பேரஸ்; தான் அவ்வாறு நினைக்க தெய்வம் வேறொன்றை நினைத்துவிட்டது.

லெபனானுக்கும் வெளியேறும் இஸ்ரேலிய துருப்புக்களுக்கும் பலத்த சண்டை மூண்டு நடைபெறுகிறது. இஸ்ரேலின் போர்வலிமை குன்றிவிட்டது. இந்தச் சண்டையின் வீறு குறைய லெபனானில் உள்ள கிறிஸ்தவ குழுவினருக்கும், ஷைட்பிரிவினருக்கும் உள்ளூர் போர் உக்கிரமானது. பலஸ்தினியர் ஷைட் பிரிவினருக்கு உதவியாக நின்று இதனை முறியடித்தனர்.

### அரசியல் அவதானி

அது முடியுமுன் ஒன்றாய் நின்ற இவ்விருபக்கமும் தம்முள் சண்டைபோடுகின்றன. கோரமான அழிவுகள் தினந்தோறும் நடைபெறுகின்றன. பலஸ்தினியன் முகாம்கள் தாக்கப்படுவதும், அத்தாக்குதல் ஒருமுறை வெற்றியும் இன்னொருமுறை தோல்வியுமாகச் சண்டை தொடருகின்றது. இன்றைய நிலையில் சிரியா, லிபியா எந்தவிதஉதவியும் செய்ய முடியாதிருக்கின்றன. பீஎல்ஓ பிளவுபட்டிருந்தபோதும். தலைவர் அரபாத்தில் பலஸ்தினிய விடுதலை நிறுவனம் நம்பிக்கைஇழந்தபோதும் இந்தச் சண்டையில் பலஸ்தினியர் ஒற்றுமைப்பட்டுதீவிரமாகப் போராடுகின்றனர்.

போர் நிறுத்தம் என்ற பாசாங்கு பலனளிக்கவில்லை.

இந்த நிலையில் அமெரிக்கா தனது நண்பன் இஸ்ரேலின் உதவியுடன் மீண்டுமொரு 'காம்ப் டேவிட்'பாணியில் புருடாச் சமாதானம் கொண்டுவர எத்தனிக்கின்றது, 1982ல் உருவான றீகன் திட்டம் முறியடிக்கப்பட்டது. இருப்பினும் இதனை இன்று மீட்டுநெறிப்படுத்த அமெரிக்கா மனப்பால் குடிக்கின்றது.

ஜோர்டான் பலஸ்தீனியர் இணைப்புக்குழு ஒன்று வெள்ளைமாளிகை சென்றதை அடுத்து றீகனும் அவருடைய கூட்டாளி ஷுல்ஸ் மத்திய கிழக்குச் செல்லவேண்டுமென்று விரும்பியிருக்கிறார். பலஸ்தீனியருக்குத் தனிநாடு என்று ஒன்று இருக்கப்படாதென்பது அமெரிக்காவும் இஸ்ரேலும் கொண்டபிடிவாதமான முடிவு. இஸ்ரேலின் போராடும் பெருமையை மீட்டு அதன் உதவியுடன் மத்தியகிழக்கில் ஆதிக்கம் செலுத்துவதும், அங்கு தளங்கள் அமைத்து ரஷ்யாவின் துரித நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதும் அமெரிக்காவின் நீண்டகாலத் திட்டம். பாவம் லெபனான் இதற்குப்பலியாகின்றது.

### இங்கிலாந்து

திருமதி தாட்சரின் ஆட்சிக்குக் கட்சியின் உட்பகை ஆதரவை நாளுக்கு நாள் குறைத்து வருகிறது. ஆங்கிலேய மக்கள் அரசியல் சிந்தனையில் முதிர்ச்சி உடையவர்கள். தொழிற் கட்சி என்றால் முற்போக்கு என்ற முடிந்த முடிவாகக் கொள்பவர்கள் அல்ல. கன்சவேட்டிவ் என்றால் பிற்போக்கு என்றும் நம்புபவர்கள் அல்ல. திருமதி தாட்சரின் இளகாத 'இரும்புத் தன்மை' இக்கால கஷ்டங்களாகிய வேலையின்மை, தொழில் வீழ்ச்சி போன்ற பல வீனங்களால் பொதுமக்கள் ஆதரவை இழப்பதற்குக் காரணமாக இருக்கின்றது.

### பிரிட்டனின் வியத்தகு கலை உணர்வு

பரந்த மனமும், திறந்த சிந்தையுமுடைய பிரிட்டிஷ் பொதுமக்கள் உலகப் பிரபலம் பெற்ற கறுத்த அமெரிக்க பாடகரும் நடிகருமான போல் ரொபிசனின் புகழ் பெற்ற ஷேக்ஸ்பியர் நடிப்புகளை நினைவுகூர கடந்த மூன்று வாரங்களாக ஒரு அழகான கலைக்காட்சியை லண்டனில் நடத்தினர்.

'ஒதெல்லோ' என்ற உலக கவிஞரின் துன்பியல் நாடகத்தை 1930 லும் பின்பு 1959லும் கறுப்பரென்று அமெரிக்கா கைவிட்ட போல்றொபிசன் திறம்பட நடித்திருந்தார். 1894—1976 வரை வாழ்ந்து அகில உலகிலுமே, பாடகர், நடிகர், விளையாட்டு வீரர்என்றமாமேதைப் பட்டங்களைப் பெற்று அமரத்துவம் அடைந்த இப்பெரியாரை பிரிட்டன் தன் சொந்த மகனாகப்போற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

### அயர்லாந்து

அயர்லாந்தின் பிரதமர் வட அயர்லாந்தின் 15 வருட உள்ளூர் போருக்கு முடிவு காணலாமென்று நம்புகிறார். ஆங்கில ஐரிஷ் பேச்சுக்கள் நடைபெறுகின்றன நிச்சயம் வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை இல்லாதபோதும், இருபகுதியினரும் களைப்படைந்தமையால் ஒருவித தீர்வு கிடைக்குமென்று கருதுகிறார். இந்த ஆவல் முன்எப்போதும் இருந்ததில்லையென்பதால் இவ்வித நம்பிக்கை கொண்டிருக்கிறார். சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வடஅயர்லாந்து நடத்திய 15 வருட போரில் மாண்டிருக்கிறனர்.

வட அயர்லாந்தில் சென்ற வாரம் நடந்த உள்ளூர் ஆட்சி தேர்தலில் ஐ. ஆர். ஏ யின் அரசியல் பலம் நிரூபிக்கப்பட்டது. 69 ஸ்தானங்களையும் மாகாணத்தின் 10 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளையும் பெற்றது.

### ஜெர்மனி

ஐரோப்பா ஒற்றுமைபட்டு ஒரு சமஷ்டி ஆட்சியை நிறுவி ஒருகுடைக் கீழ் ஐரோப்பாவைக் கொண்டு வரவேண்டுமென்று பேசிக் கொண்டிருக்கும் வேளையில் சில குழுவினர் குறிப்பாக சில அமெரிக்க பிரிட்டிஷ் ஸ்தாபனங்கள் ஜேர்மனியிலும் அதன் மக்களிலும் வெறுப்புக் கொண்டவர்கள் போல் நடக்கின்றனர். கபடம் என்பது என்னவென்று தெரியாத ஜெர்மன் பொதுமக்கள் இலகுவில் உணர்ச்சி வசப்படுபவர்கள்; ஆனால் வஞ்சனையற்றுச் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவர்கள்

இன்றைய நிலையில் 8 கோடி ஜெர்மன் மக்களில் காற்பகுதி கிழக்கில் ரஷ்யாவின் வார்சோ ஒப்பந்தத்துக்கு கட்டுப்பட்டவர்கள். 6 கோடி மேற்கு ஜெர்மனியில், ஐரோப்பிய சமுதாயத்துக்கும் நேட்டோவுக்தம் கட்டுப்பட்டவர்கள்.

ஐரோப்பாவுக்கு இன்று தேவையானது பூரணப்பட்ட ஜெர்மனியின் தொழிற்திறமையும். ராணுவமுமே இந்த நிலையில் பழைய

[5-ம் பக்கம் பார்க்க]

## பங்களாதேஷில் வீசிய கடும் புயல்!

# 500 பேர் பலி! 500 பேர் கடலில்மூழ்கினர்!!

# ஐம்பது அடி உயரத்துக்கு அலைகள் எழுந்தன

(டாக்கா)

**பங்களாதேஷில் கடந்த மூன்று தினங்களாக வீசும் கடும்புயலினால் 500க்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர்! சுமார் 500 பேர் வரையில் நீரில் மூழ்கி இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது**

வங்காளவிரிகுடாவில் ஏற்பட்ட பவன அமுக்கத்தைத் தொடர்ந்து பங்களாதேஷில் வீசிய இந்தக் கடும்புயல் 50 அடி உயரத்துக்கு அலைகளை எழுப்பி பல தீவுகளை அடித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

பங்களாதேஷின் தெற்குப் பகுதியிலுள்ள சுமார் 1000 சிறிய தீவுகள் இந்தக் கடல் அலைகளினால் அடித்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சிட்டகொங் நகரம் முற்றாகவே புயலினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய தகவல்களின்படி 500க்கும் மேற்பட்ட மக்கள் இறந்துள்ளனர் ஆயினும் தெற்கு பகுதிகளிலிருந்து எந்த ஒரு தகவலும் பெறமுடியாமலுள்ளது இத்தகவல்களும் கிடைத்தால் மொத்தம் 500 பேர்வரையில் இறந்திருக்கலாமென நம்பப்படுகிறது. அர்ஜா முன்சிபஜார் என்ற கிராமத்தில் மாத்திரம் 172 சடலங்கள் கிடந்ததாக அரச அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை தெற்கு மாகாணங்களின் கரையோரப்பகுதிகளில் மீனவர்களின் படகுகள் கவிழ்ந்ததில் 500 பேர்வரையில் கடலில் மூழ்கியிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

தொடர்ந்தும் நாடு முழுவதும் தகவல் தொடர்பும் மின்சாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## செம்படை சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்) வாசகம் பொறிக்கப்பட்ட 'செம்படை' கொரில்லாக் வர்ணச் சுவரொட்டிகள் களின் ''தாயகம் இன்றேல் யாழ் குடாநாடெங்கும் வீரமரணம்'' என்ற தலைப்பில் காணப்பட்டன. (மா)


## பிரயாண சேவை

கொழும்பு — பேர்ளின்
கொழும்பு — லண்டன்

விமானப் பயணங்கள்

- ✱ துரிதசேவை (வாராந்தம் இரு சேவைகள்)
- ✱ முற்பணம் அவசியமில்லை
- ✱ யாழ் — கொழும்பு — கட்டுநாயக்கா

பிரயாண ஒழுங்குகள்,
கொழும்பில் கண்ணியமான தங்குமிடவசதி

மற்றும்

பாஸ்போட், விசா, பொண்ட்
ஆகியவற்றிற்கும்

**லிப்ருஸ் லிமிட்டெட்**

(R. G பில்டிங்)
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கொழும்பில்

LIBRAS LTD.
PAUL VI CENTRE,
24, FRONT STREET, COLOMBO 1.

(3468)


# பூரண திருப்தியுடன் ரஜீவ் நாடு திரும்பினர்

(மாஸ்கோ)

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தி சோவியத்யூனியனில் தமது ஆறுநாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுக்காலை தாயகம் திரும்பினர்.

தமது சோவியத் விஜயத்தின் இறுதியாக கிர்கிர்ஸியா சோவியத் குடியரசுக்கு விஜயம் செய்திருந்தார். அங்கு அவர் அந்தக் குடியரசின் தலைவர்களுடன் இருதரப்புப்பேச்சு வார்த்தைகளை நடத்தினர். இரண்டாம் உலகப் போரில் நாஸி ஜெர்மனியர்களினால் பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சென்றுபார்த்து அங்கு இடம் பெற்ற அப்பாவிமக்களின் உயிர் கொலைகளின் நினைவுச்சின்னங்களுக்கு மரியாதை செலுத்தினர்.

இறுதியாக அவர் நேற்று கிர்கிர்ஸியா தலைநகர் புறுன்ஸேயில் இருந்து தாயகம் திரும்பினர்.

அவர் தாயகம திரும்புமுன்னர் புறுன்ஸேயில் பிரதமர் ரஜீவ் வெளியிட்டுள்ள செய்தியில் ''சோவியத் யூனியனும் இந்தியாவும் சகலதுறைகளிலும் ஒருமித்த கருத்தையே கொண்டுள்ளன. முக்கியமாக சர்வதேச விவகாரங்களில் இரு நாடுகளின் கொள்கைகளும் பெருமளவுக்கு ஒரே கருத்தையே கொண்டுள்ளன. இதனால் இருநாட்டு உறவுகளும் நீண்டதொரு காலத்துக்கு நிலைத்து நிற்கும் தன்மை கொண்டவை. முக்கியமாக சோவியத்-இந்திய உறவுகள் அற்புதமானது, உறுதியானது, ஒருமித்த தன்மை கொண்டது, நீண்டகாலத்துக்கு நிலைத்துநிற்கும்தன்மை வாய்ந்தது'' என்று அவர் குறிப்பிட்டார்.

# டீசல் தட்டுப்பாடு: பஸ்சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

டீசல் இல்லாததனால் கடந்த இரு தினங்களாக இ. போ. ச பஸ் சேவை நடைபெற வில்லை.

பருத்தித்துறை, காரைநகர் யாழ். டிப்போ பஸ்கள் சேவை செய்யவில்லை. கிளிநொச்சி டிப்போ பஸ்கள் மட்டும் யாழ். வந்து திரும்பின.

பஸ் சேவை இல்லாததனால் பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் (க)

## அந்த மை காய்வதற்குள்...

(யாழ்ப்பாணம்)

குருநகர் முகாம் முன் வங்கிக் கிளைகள் இயங்கி வந்த கூட்டுறவுப் பயிற்சிப் பாடசாலைக் கட்டிடத்தில் இருந்து களவாடப்பட்ட தளபாடங்களை இளைஞர் கோஷ்டி ஒன்று கண்டுபிடித்து மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநகர்தொடர்மாடிவீடுகளிலிருந்துஇராணுவத்தினர்வெளியேறிச்சென்றதும் முகாமுக்கு முன்னால் உள்ள மேற்படி கட்டிடத்திலிருந்து தளபாடங்களைச் சிலர் எடுத்துச் சென்றனராம்.

அஸ்பெஸ்டஸ் சீற்றுகள், கட்டில், கதிரை போன்ற தளபாடங்களே சிலரால்எடுத்துச்செல்லப்பட்டதாகவும். பொதுமக்கள் அப்பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு இது விஷயம் தெரியப்படுத்தவே, துரித தேடுதலில் ஈடுபட்ட இளைஞர்கள் தளபாடங்களை மீட்டு உரிய இடத்தில் சமர்ப்பித்ததாகக் கூறப்படுகிறது.

அதே நேரத்தில் குருநகர் தொடர்மாடி வீடுகளில் குடிபுகுந்தவர்கள், அங்கு சில வசதிக்குறைவுகள் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

முக்கியமாக அக்கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர்ப் பைப்புகளை திடீரென யாரோ கழற்றிச் சென்றுவிட்டதால் தொட்டியிலிருந்து நீர் எந்நேரமும் வெளியேறிக்கொண்டிருக் கிறதாம்.

தெரிவு செய்யப்பட்ட சுமார் 148 குடியிருப்பாளர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் அதிகமான குடும்பங்கள் தங்கள் தட்டுமுட்டுச்சாமான்களுடன்குடியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## முல்லைத்தீவுப் பகுதி

# ஆசிரியர் வேதனம்: தாமதத்தை தடுக்ககோரிக்கை

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்களுக்காக சம்பளக் காசோலைகளை பிரதி மாதமும் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர்களுக்கான முல்லைத்தீவுக் கிளை பிரதேசக் கல்விப்பணிப் பாளரைக் கேட்டுள்ளது.

கல்விப்பணிப்பாளருக்கு மேற்படி கிளை அனுப்பியுள்ள கடிதத்தில், ''எமது மாவட்டத்தில் கடந்த பெப்ரவரி மார்ச், ஏப்ரல், மே போன்ற மாதங்களில் ஆசிரியர்களின் வேதனம் பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்கள், இம்மாதம் 20, 21ம் திகதி ஆகியும் இதுவரை சம்பளப்பத்திரம் முழுப்பாடசாலைகட்கும் வழங்கப்படவில்லை. சில பாடசாலை அதிபர்கள் சம்பளப் பத்திரத்தைப் பெறுவதற்கு காரியாலயத்திற்குப் பலதடவை வந்து சென்றுள்ளார்கள்'' என்று தெரிவித்துள்ளது.

ஆசிரியர் வேதனம் தாமதமாவதற்கு பிரதான காரணம் அதற்குரிய எழுதுவினைஞர் இல்லாமையே என்று அறிகின்றோம். இதனால் வேதனம் தாமதமாவதோடு தொடர்ந்து ஆசிரியர்களுக்குரிய சம்பள உயர்ச்சி வழங்கப்படாது இருக்கின்றது. பெரும்பாலான ஆசிரியர்களின் சம்பளஉயர்ச்சி மே 1 ஆகும். ஆனால் அது வழங்கப்படாமை குறிப்பிடத்தக்கது. தனிப்பட்ட காசோலையை மாற்றுவதில் உள்ள சிரமத்தோடு ஆசிரியர்கட்கு தாமதமாக வழங்குவது ஆசிரியர்களை மேலும் சிரமத்துக்குள்ளாக்குவதாகும்.

எனவே ஆசிரியர்களின் வேதனக் காசோலைகளை 20ம் திகதிக்குமுன் கிடைப்பதற்கு அடுத்துவரும் மாதங்களில் உரிய ஒழுங்குகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகிறோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு 4846

வல்லிபுரம் சண்முகசுந்தரம், நீதிமன்ற வீதி, மல்லாகம்.

—வாதி

கந்தையா சின்னத்தம்பி, வல்வெட்டி.

—பிரதிவாதி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1985-ம் ஆண்டு ஆனி மாதம் 3-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைக் தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 14 000/-வும் மேலும் ரூபா 7-000/-ற்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு இருபது வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 982-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1983-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ம் திகதிவரையுமான வட்டியும் அதன் பின் தீர்வைமுழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூறறுக்கு 12 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 424 -50 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 2210/- நடைபெறவேண்டிய செலவு ரூபா 1054-75 மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 980-75) கொடுக்கவேண்டி இருப்பதாலும் இதில் தீர்ப்பாணைத் தொகையில் ஓர் பகுதிப் பணமாக கொடுபட்ட ரூபா 8.000/-மும் செலவு தொகையில் ஓர் பகுதிப் பணமாக கொடுபட்ட மொத்தம் ரூபா 850/-ம் கழிபடல்வேண்டும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகக் கோவிற்பற்று மல்லாகம் இறை; ஒடை வளவு நிலபரப்பு இரண்டு குளி பன்னிரண்டுடன் முப்பத்திரண்டில் இருபத்தொன்பது. இதற்கு எல்லை கிழக்கு கந்தையா நடராசாவின் ஆதனம், வடக்கு சுப்பிரமணியம் பெண் பாக்கியத்தின் ஆதனம், மேற்கு மாதர் நாகலிங்கத்தின் உரிமைக்காரரின் ஆதனமும் ஒழுங்கை முகப்பும், தெற்கு தவசி வயிரமுத்துவுக்கும் மறுபேருக்குரிய ஆதனமும் ஒழுங்கையும், இவ்வெல்லைப்படி இதடங்கலும், கிழக்கெல்லையில் இருக்கும் கிணற்றிற் பங்கும், கிழக்கெல்லைக் காணியின் வடக்கெல்லையருகால் பாதைப் பாவிப்புரித்தும்.

க. நவரத்தினம்,
நீதிமன்ற விற்பனையாளரும் மதிப்பாளரும்

வட்டுக் கிழக்கு,
வட்டுக்கோட்டை,
16-3-85.

(3469)

**ஸ்ரான்லி மினி**
5x5 திரையில்
10-30 2-30
ஆனந்பாபு - நாகேஷ்
'பாடும் வானம்பாடி'
சிறந்த பாடல்கள்
நிறைந்த படம்

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன்-ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
**சலங்கை ஒலி**
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

**ஆனந்தி**
**வீடியோ சினிமா**
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
லட்சுமி நடித்த
**இதயவீணை**
(கலர்)

**ஹரன் சினிமா**
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல்
கொண்டாடிய வெற்றிச்
சித்திரம்
மோகன் - பூர்ணிமா
**விதி**
(கலர்)

**லதா மினி**
(கோண்டாவில்)
காலை 10-30 மாலை 2 30 4-00
**'100 RIFELES'**

**வின்ஸர்**
தினசரி 10-30, 2-30
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
அசோகன், - நாகேஷ்
ஆனந்தன்
நடித்த
**தனிப் பிறவி**
(புதிய கொப்பி)

**யாழ். வின்ஸர் மினி**
தினசரி 10-30, 2-30
ரஜனிகாந்த், ரதி,
நம்பியார் நடித்த
**கழுகு**

**லிடோ சினிமா**
சுதாகர் - ராதிகா
நடித்த
**ஆயிரம் வாசல்**
**இதயம்**
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
**மௌன கீதங்கள்**
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

**S. T. L. மினிசினிமா**
(திருநெல்வேலி)
10-30 2-00
மோகன்—ரேவதி
**உதயகீதம்**
4 30 p m.
ALLICE GOOD BODY
(கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்)

**மொடேர்ண்**
**மினி சினிமா**
தினசரி 1-30 மட்டும்
S V சேகர், சுகாசினி
மனோரமா நடித்த
**மருமகளே வாழ்க**
**From Russia with Love**
007 - புகழ் சீன் ஹொனறி
நடித்த பயங்கர சண்டைக்
காட்சிகள் நிறைந்த
துப்பறியும் படம்


# வெளிநாட்டு அகதி முகாம்களில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் தமிழ் அகதிகள்!

## 'ஆஸி' அமைச்சருக்கு நீலன் விளக்கம்

[கொழும்பு]

இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் தஞ்சமடைந்துள்ள 1 லட்சத்து 30 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளுடன் இலங்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அகதிகள் முகாம்களில் சுமார் 65 ஆயிரம் தமிழர்கள் உள்ளனர் என்று டாக்டர் நீலன் திருச்செல்வம் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு பில்ஹெய்டனிடம் தெரிவித்துள்ளார்.

இந்த அகதிகள் கௌரவத்துடனும் பாதுகாப்புடன் தமது இல்லங்களுக்குச் செல்ல வழிசெய்யப்படல் வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ரா]

# ஒய்வூதியம் இன்றும் நாளையும் வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

தபால் அலுவலகங்களில் ஒய்வூதியம் பெற்றுவந்தவர்களுக்கு மே மாதத்துக்குரிய பணக்கொடுப்பனவுகள் யாழ். விளையாட்டரங்கில் இன்றும் நாளையும் அறிவிக்கப்பட்ட இடங்களிலுள்ளவர்களுக்கு வழங்கப்படும் என்று வடபிராந்திய தபால் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

இம்மாதம் 29, 30, 31, ஜூன் 3, 4-ம் திகதிகளில் வழங்கப்பட வேண்டியவர்களுக்கு, பணம் வந்து சேர்ந்ததும் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். [மா]

## தென்னாபிரிக்கா...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பகைமையைப் புரட்டிப் புரட்டிப் பேசி அந்த நாட்டுமக்களைப் புண்படுத்துவதால் நட்டம் ஒழிய நயமில்லை.

ஜெர்மனியில் இருபகுதிகளும், தொழில், விஞ்ஞானம், ஆராய்ச்சி போன்ற துறைகளில் இமயம் போல் உயர்ந்திருக்கின்றன. ஜனநாயகம் சட்டஆட்சி, ஜெர்மனியில் குறிப்பாக மேற்கில் வேரூன்றி விட்டது.

# வல்வை நகர மின்பாவனையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்—1985

உள்ளூராட்சி ஆணையாளரின் 1985/8ம் இலக்கச் சுற்று நிருபப்படி 1-3-85 ல் இருந்து அமுல் நடத்தப்பட வேண்டிய மின் கட்டண நடைமுறையை பின்வருமாறு பிரதம மின் பரிசோதகர் அங்கீகரித்துள்ளாரென்பதை அறியத்தருகிறேன்.

**(1) வீட்டுப்பாவனை விகிதம்:-**

| | | | |
|---|---|---|---|
| 1—30 | அலகு வரை | — அலகு ஒன்றுக்கு | — ரூபா -/50 சதவீதம் |
| 31—150 | ,, ,, | — ,, ,, | — ரூபா 1/10 விதம் |
| 151—500 | ,, ,, | — ,, ,, | — ரூபா 2/- வீதம் |
| 501—மேல் | ,, ,, | — ,, ,, | — ரூபா 2/50 வீதம். |

} எரிபொருள்கட்டணமும்

குறைந்த மாதக்கட்டணம் ரூபா — 15/-

**(2) தர்மஸ்தாபனங்கள் விகிதம்:-**

அலகு ஒன்றுக்கு ரூபா -/50 சதவீதம்
குறைந்தமாதக் கட்டணம் — ரூபா 10-

**(3) பொதுநோக்கு விகிதங்கள் (1)**

50 கிலோ உவாற்று அம்பியருக்குள்- மாதக்கட்டணம் (அ) வில் உள்ள அலகுக் கட்டணமும் (ஆ) வில் உள்ள கிலோ உவாற்றுக் கட்டணமுமாகும்.

அ. ஒவ்வோர் அலகும் ரூபா 2/-ம் எரிபொருட் கட்டணமும்.

ஆ. மாத நிரந்தரக்கட்டணம்
5 கிலோ உவாற் வரை — ரூபா 30/-
5 கிலோ உவாற்றின் மேல் 10 கி. உ. வரை — ரூபா 50/-
10 ,, ,, ,, 50 ,, ,, — ரூபா 150/-

**பொதுநோக்கு விகிதங்கள் (2)**

50 கிலோ உவாற்றுக்கு மேல்—
மாதக்கட்டணம் (அ) வில் உள்ளதும் [ஆ) வில் உள்ளதும் (இ)ல் உள்ளதும் சேர்த்தே விதிக்கப்படும்.

(அ) அலகொன்றுக்கு ரூபா 2/- வீதமும் எரிபொருள் கட்டணமும்.
(ஆ) மாத நிரந்தரக் கட்டணம் — ரூபா 250/-
(இ) ஒவ்வோர் கிலோ உவாற்றுக்கும் ரூபா 140/- வீதம்.

**(4) கைத்தொழில் இறுப்பு - (1)**

50 கிலோ உவாற்றுக்குள்
மாதக்கட்டணம் (அ) வில் உள்ளதும் (ஆ) வில் உள்ளதும் சேர்ந்த தொகையாகும்
(அ) அலகொன்றுக்கு ரூபா 2/ம் எரிபொருட்கட்டணமும்
(ஆ) மாத நிரந்தரக் கட்டணம்
5 கிலோ உவாற் அம்பியருக்குள் — ரூபா 30/-
5 ,, ,, அம்பியருக்குமேல் 10 கி உவாற் அம்பியர்வரை -ரூபா 50/-
10 ,, ,, ,, 50 ,, ,, ,, ,, ரூ. 150/-

**கைத்தொழில் இறுப்பு (2)**

பொது நோக்கு இறுப்பு 2க்கு விதித்தபடி அறவிடப்படும். ஆனால் கே. வி. ஏக் கட்டணம் ஒவ்வோர் கே. வி. ஏக்கும் ரூபா 115/- வீதம்.

**(5) கோட்டல்கள் இறுப்பு (1)**

பொது நோக்கில் விதிக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்படும்.

**கோட்டல் இறுப்பு (2)**

பொதுநோக்கு (2)ல் உள்ளபடி ஆனால் ஒவ்வோர் கிலோ உவாற்றுக்கு ரூபா 165/-

மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சுப்பிரமணியம்,
செயலாளர்,
நகரசபை—வல்வெட்டித்துறை.

நகரசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
24- 05- 1985.

3458

# இரண்டாம் வருட நினைவஞ்சலி

## மேரிஸ்ரெலா லிகியா



அன்னை மடியில்:
01-07-58

அமலன் அடியில்:
26-05-83

அன்புத்தெய்வமே- அணைந்து இரண்டாண்டாச்சு. உம் நினைவு எம் மனதில் - உன்னத இடமாச்சு. கண்ணில் இருக்கிறாய் - காண வில்லைத் தேடுகின்றோம்.
பேசுகின்றோம் உன்னோடு-பேசாதிருக்கின்றாய்.
ஏன் இந்தக் கோலமோ-இறைவா
உன் சோதனையோ.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 27-05-85 காலை 6-15 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

ஆறாத்துயரில் புலம்பும்
தாய், தந்தையர். குடும்பத்தினர்.
16, பற்றிமா அவனியூ, மிருசுவில். 3454

# அந்தியட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## திருமதி தங்கரெத்தினம் சிவாலிங்கம்



தோற்றம்:
28-1-1924

மறைவு:
28-4-1985

எங்களை எல்லாம் இந்த நிலைக்கு உயர்த்தி- எம்மையும் இவ்வுலகில் மற்றோர் மதிக்கும் மானிடராக வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத் தாயின் அந்தியட்டிக்கிரியைகள் 28-5-1985 செவ்வாய்க்கிழமை (நாளை) காலை 7 மணிக்கும் வீட்டுக்கிரியைகள் பகல் 11 மணிக்கும் உடையார் வளவு-நெல்லெண்டை பருத்தித்துறையில் நடைபெறும். உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தாயாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், சகல உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

கணவன், பிள்ளைகள். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
உடையார் வளவு, நெல்லெண்டை,
பருத்தித்துறை 3451

# பண்ணை மீன்சந்தை கொட்டடிக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணையிலிருந்த மீன்சந்தை கொட்டடிக்கு மாற்றப்பட்டுள்ளது.

பண்ணையிலுள்ள இறைச்சிக் கடைகளும், கொட்டடியில் கட்டட வசதிகள் செய்யப்பட்ட பின் மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பண்ணையிலுள்ள மீன் இறைச்சிக்கடைகளுக்கு செல்வதற்கு பொதுமக்கள் அச்சமடைந்ததினாலும் வியாபாரிகள் தயங்கியதாலும் மீன் சந்தை மாற்றப்பட்டுள்ளது. (க)

# குருநகர் வீடுகள் வழங்கியதில் பாரபட்சமாம்!

## அதிகார சபைக்கு புகார்

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடி வீடுகள் வழங்குவதில் சிறுபான்மைத்தமிழருக்கு அநீதியும் பாரபட்சமும் காட்டப்பட்டுள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

குருநகரைச்சேர்ந்த 200க்கு மேற்பட்ட பெண்கள் மாவட்ட முகாமையாளரைச் சந்தித்து வீடுகள் வழங்கப்பட்டதற்கு தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து நீண்ட மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

'குருநகர் தொடர்மாடிகள் அமைந்த வட்டாரத்தில் வசிக்கும் 90 சத வீதத்துக்கு மேற்பட்ட சிறுபான்மைத் தமிழ்மக்கள் 1950-ம் ஆண்டு தொடக்கம் யாழ். மாநகர சபைக்குப் பிரதிநிதித்துவப் படுத்தி வருகிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் பொருளாதாரத்தில் மிகவும் குறைந்த நிலையில் வாழுகின்றனர். சொந்தக் காணியோ வீடோ கிடையாது.

### யோகேஸ் உறுதி

குருநகர் தொடர்மாடிகள் அமைக்கப்பட்டபோது அங்கே சிறுபான்மைத் தமிழருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் இரண்டாவதாக றெக்கிளமேசன பகுதியில் வாழும் மீனவ சமூகத்துக்கு அளிக்கப்படும் என்றும், அத்திட்டத்துக்கு மூலகர்த்தாவாக இருந்த முன்னாள் யாழ். எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் உறுதியளித்திருந்தார்.

ஆனால் வழங்கப்பட்ட 142 வீடுகளில் 128 வீடுகள் மீனவ சமூகத்துக்கும், 14 வீடுகள் மட்டும் சிறுபான்மைத்தமிழர் சமூகத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன. எனவே நடைபெற்றுள்ள அநீதியைப் போக்கும் முகமாக வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டதை ரத்துச்செய்து, நியாயமான விகிதாசார அடிப்படையில் வழங்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்'' என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென். ரோக் சனசமூகநிலைய மகளிர் மன்றத் தலைவி திருமதி யோ. வேதநாயகம் இந்த மகஜரைக் கையளித்தார். இதன் பிரதிகள் யாழ் மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே சிவஞானம், யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

பிரச்னைகளைக் கேட்டறிந்த அதிகார சபை முகாமையாளர் திரு த. பூ. முருகையா நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். (மா)

# இளைஞர்கள் விசாரணை

[மட்டக்களப்பு]

ஏறாவூர்ப் பகுதியில் இடம்பெற்ற சோதனையின்போது பல இளைஞர்கள் விசாரணைக்காக கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள பிரதான வீதிகள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (மா)

# கிழக்கிலங்கையில் மீண்டும் ஓர் சம்பவம்

(கொழும்பு)

கிழக்குமாகாணத்தில் காத்தான் குடிக்கருகில் நேற்று சிறு அசம்பாவிதம் ஒன்றைத் தொடர்ந்து பொலிஸ் ஸ்தலத்துக்கு விரைந்து அமைதியை நிலை நாட்டியதாக அறியப்படுகிறது.

மண் ஏற்றுவதற்குச் சென்ற டிராக்டர் ஒன்று எரிக்கப்பட்டதையடுத்து அமைதியின்மை தோன்றியதாகவும் உடனடியாகப் பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்ததாகவும் கூறப்படுகின்றது.

# நிலாவெளி சம்பவம் கொலையென தீர்ப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நிலாவெளியில் சுட்டுக் கொல்லப்பட்ட ஐவரின் மரணங்களும் மரண விசாரணையில் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

நடராஜா முத்துலிங்கம் (22 வயது), கந்தப்பு மாணிக்கம் (52 வயது), சினித்தம்பி சண்முகநாதன் (18 வயது), கங்காதரன் (34 வயது), கே. கனகராஜா (19 வயது) ஆகிய ஐவரது மரணங்கள் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய திருகோணமலை பதில் நீதவான் கே. செல்வராஜா கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.

# வான் கடத்தல்

[மானிப்பாய்]

நாவற்குழி அன்றீஸ் அன்ட் கம்பனிக்குச் சொந்தமான வான் ஒன்று நேற்று இனந்தெரியாத நபர்களால் கைதடிச் சந்தியில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டது.

ஏற்கனவே இக் கம்பனிக்குச் சொந்தமான மற்றொருவான் சென்ற 14-ம் திகதி கடத்தப்பட்டது. (க)

# பன்குளத்தில் 9 பேர்

(திருகோணமலை)

பன்குளத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ள 9 பேரின் பெயர்கள் வருமாறு:

திருமதி தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி, மாரிமுத்து வள்ளி, திருமதி பாண்டி அய்யா அபிராமி (65), தாமோதரம்பிள்ளை வேலாயுதம், வேலாயுதம் யோகநாதன், சாமித்தம்பி பூபாலன், திருமதி தாமோதரம்பிள்ளை, ஜெயபாலன் (2 வயது) வைத்திலிங்கம் சண்முகலிங்கம்.

# தடுப்பூசி மருந்து இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் விசர் நாய்க்கடிக்கு செலுத்தப்படும் தடுப்பூசி மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது!

இத்தடுப்பூசி மருந்துவகை இல்லாததால் விசர் நாய்கடிக்குள்ளானோர் பலர் மரணத்தை தழுவியிருப்பதாகக் கூறப்படுகிறது

யாழ் மாவட்டத்தில் விசர் நாய்கடியினால் பாதிக்கப்பட்வர்களுக்கு தடுப்பூசி மருந்து செலுத்துவதற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள அதேவேளை முல்லைத்தீவு, வவனியா போன்ற மாவட்டங்களிலிருந்தும் விசர் நாய்க்கடிக்குள்ளானோர் யாழ் ஆஸ்பத்திரிக்கு வருகிறார்கள் என்று வைத்திய அதிகாரி கவலை தெரிவிக்கிறார். (மா)

## கைதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டனர்.

இவ்வாறு 113 பேர் வெள்ளவத்தைப் பகுதியிலும், 32 பேர் வட கொழும்பு பகுதியிலும் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் கூறினார்கள்.

விசாரணையின் போது இவ்விளைஞர்கள் அனைவருமே எதுவித சந்தேகத்துக்கும் உட்பட்டவர்கள் இல்லையென்று காணப்பட்டதாகவும் அதன் பேரில் அனைவரும் விடுவிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## 20ம் திகதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் ஒன்றையும் அனுப்ப வேண்டும் அக்கடிதத்தின் பிரதியொன்றை தனது விலாசத்துக்கு அனுப்பிவைக்குமாறும் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார் கே. ஜெயக்குமார், கல்விச் சேவைக் ஆணைக்குழு ISURUCAYA• கல்வித் திணைக்களம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கோட்டே என்ற விலாசத்துக்கு மேற்படி கடிதத்தின் பிரதியை அனுப்ப வேண்டும்.

# இறந்தோர் தொகை ஐயாயிரம்!

[டாக்கா]

பங்களாதேஷில் ஏற்பட்ட கடும்புயல் காரணமாகக் கடைசியாகக் கிடைத்த தகவலின்படி இறந்தோர் தொகை ஐயாயிரத்துக்கு உயர்ந்துள்ளதாக அஞ்சப்படுகிறது.

கரைக்கு அப்பால் உள்ள தீவுகளிலிருந்து நூற்றுக்கணக்கான சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றதெனவும், பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர்பற்றிய எவ்விதத் தகவலும் இதுவரை இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

# விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர் விபத்துக்குள்ளாகி ஸ்தலத்திலேயே மரணமானார்.

நயினாதீவைச் சேர்ந்த க. குமரையா [60 வயது] என்பவரே மரணமானவராவார்.

சண்டிலுப்பாயிலுள்ள ஒரு மில்லில் கணக்கப்பிள்ளையாகக் கடமையாற்றிய இவர் வட்டுக்கோட்டையில் வாடகை வீட்டில் வசித்து வருவசாகவும் மில்லிலிருந்து சைக்கிளில் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொழுது லொறி விபத்தில் சிக்கி மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

# தென்னிலங்கையில் வெங்காயவிலை உயர்வு

[சுன்னாகம்]

தென்னிலங்கையில் வெங்காயத்தின் விலை திடீரென உயர்ந்துள்ளது. கடந்தவாரம் அனுராதபுர சம்பவத்தைத் தொடர்ந்து போக்கு வரத்து சீரின்மையால் வடபகுதியில் இருந்து லொறிகளில் வெங்காயம் செல்லாததால் வெங்காயத்தின்விலை உயர்ந்துள்ளது. தலைநகரில் ஒரு அந்தர் வெங்காயம் 1600 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகிறது

இதே சமயம் யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிலங்கைக்கு வெங்காயத்துடன் செல்லும் வாகனங்கள் நீண்டநேர சோதனைக்காக தடுத்து வைக்கப்படாமல் உடனே பயணத்தை தொடர அனுமதிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது (கி)

# எழுவைதீவில் கரைஒதுங்கிய சடலம்

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவுக் கடலில் பிரயாணிகள் படகில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் கடலில் வீசப்பட்டதாகக் கருதப்படுபவர்களில் ஒருவரது சடலம் எழுவைதீவுக் கடற்கரையில் ஒதுங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

உருக்குலைந்த நிலையில் உயரமான தோற்றம்கொண்ட இச் சடலம் நெடுந்தீவு ப. நோ கூ சங்க ஊழியரான க. கார்த்திகேசு என்பவரது சடலமாக இருக்கலாமென்றும் கருதப்படுகிறது

கடந்த 15-ம் திகதி படகுப் [illegible] தாக்கப்பட்டபோது, குறிப்பிட்ட நபர் தாக்கமுயற்சித்ததாகவும் அவ்வேளை அவர் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி பின்னர் கடலில் வீசப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கரை ஒதுங்கிக் கிடந்த இச் சடலம் அப்பகுதி மக்களால் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இறந்தோர் தொகைமேலும் 36-ஆக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (மா)

# திருமலையில் 'மரண தண்டனை'

[திருகோணமலை]

திருகோணமலையில் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

'சமூகவிரோதி' எனக் கருதப்பட்டு 'மரண தண்டனை' அடிப்படையில் இவர் கொல்லப்பட்டுள்ளார். உப்புவெளி துவரங்காட்டைச் சேர்ந்த தோமஸ் எட்வேர்ட் என்பவருக்கே இந்நிலை ஏற்பட்டது.

# திருமலை ஊடாக சென்றோர் கைது

[வவனியா]

கொழும்பு போக திருமலை சென்றவர்கள் அங்கு கைது செய்யப்பட்டு கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

வெளிநாடு செல்லவே குறித்த இளைஞர்கள் திருமலை ஊடாக கொழும்புக்கு செல்லமுற்பட்டனர் என்றும் திருமலையில் வைத்து கைது செய்யப்பட்டு, பின் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிகிறது. இதில் வவனியா இளைஞர்கள் சிலரும் அடங்குவார்கள்.

# வவனியாவில் 270-அநுராதபுரம் அகதிகள்

[வவனியா]

அனுராதபுரத்திலிருந்து 85 குடும்பங்களைச் சேர்ந்த 270 பேர் அகதிகளாக வவனியாவில் தங்கியுள்ளார்கள்.

ஓமந்தை, பாக்குவாட்டஸ், விவசாய பாடசாலை ஆகிய இடங்களில் இவ் அகதிகள் முகாமிட்டுள்ளார்கள். இத் தகவலை கச்சேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# விளையாட்டு வினையில் முடிந்தது

[கொழும்பு]

அநுராதபுரத்தில் ஊர்காவல் படையைச் சேர்ந்த சில இளைஞர்கள் துப்பாக்கி சகிதம் விளையாடிக் கொண்டிருந்த போது தவறுதலாக துப்பாக்கி வெடித்ததினால் மகிந்தபால (16) என்பவர் மரணமாகியுள்ளார்.

# குண்டுச் சத்தத்தின் அதிர்ச்சியால் மரத்திலிருந்து விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

குண்டுகள் வைத்து வீடுகள் தகர்க்கப்பட்ட பேரதிர்ச்சியினால் பனைமரத்தில் சீவல்தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் நிலத்தில் வீழ்ந்து மரணமானார் எனக்கூறப்படுகிறது.

காரைநகரிலுள்ள கருங்காலி என்னும் கிராமத்தில் இப்பரிதாப சம்பவம் இடம் பெற்றது.

முகாமுக்கு அண்மையில் உள்ள வீடுகள் சில பாதுகாப்புக்கருதி குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்ட பொழுது, பனைமரத்தில் கள் இறக்கிக் கொண்டிருந்த தொழிலாளி குண்டு வெடிப்புச் சத்தத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியில் மயக்கமடைந்து நிலத்தில் வீழ்ந்தாராம். அவர் பின்னர் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (மா)

# பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்

[யாழ்ப்பாணம்]

அநுராதபுரத்தில் இடம்பெற்ற சம்பவத்திற்குப் பின்னர் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் திரும்பிய அரச-கூட்டுத்தாபன தனியார் துறைகளைச் சேர்ந்த சுமார் 75 தமிழ் ஊழியர்கள் மீண்டும் கடமைக்குச் செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டதாகத் தெரிகிறது

பாதிக்கப்பட்ட இந்த ஊழியர்கள் 'பாதிக்கப்பட்ட இணைப்புக் குழு' விடம் நிவாரணம் பெற்றுத்தருமாறு கோரியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஊழியர்களினால் அவலநிலை குறித்து இணைப்பு குழு, யாழ் அரசாங்க அதிபரை இன்று [திங்கள்] சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அதன் செயலாளர் திரு ஐ ரி. சம்பந்தன் தெரிவித்துள்ளார். (மா)

# வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கைதடியில் நேற்றுக் காலை வயோதிபர் ஒருவர் பஸ் விபத்தில் பலியானார்.

நல்லூரைச் சேர்ந்த 63 வயதான எஸ் முத்துசாமி என்பவரே பலியானவராவார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/31. Eelanadu PO, Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126